வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண்.3973/அ4/2021 நாள் 31.12.2021

----

பொருள் : பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2021–2022ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வு – அரசு / நகராட்சி தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு – மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்து ஒப்படைக்க கோருதல் – சார்பு.

பார்வை : 1)அரசாணை (நிலை) எண்.176, பள்ளிக் கல்வி (ப.க.5(1)த்துறை) நாள் 17.12.2021
2)சென்னை, தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.25154/அ1/இ2/2021 நாள் 30.12.2021

----

வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு / நகராட்சி தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் / முதுகலை ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்கள் நிலை – 1 / கணினி பயிற்றுநர் நிலை – 1 / தொழிற்கல்வி ஆசிரியர்கள் / பட்டதாரி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை–2 / உடற்கல்வி ஆசிரியர்கள் / சிறப்பாசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்களுக்கான 2021–2022ஆம் ஆண்டிற்கான கலந்தாய்வு நெறிமுறைகள் பார்வையில் காணும் அரசாணை மற்றும் செயல்முறைகள் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021–2022ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல் கலந்தாய்வுகள் இணையதளம் வாயிலாக மேற்கொள்ளப்பட உள்ளதால் பொது மாறுதல் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் பார்வையில் காணும் அரசாணையில் வழங்கப்பட்ட வழிமுறைகள் மற்றும் அறிவுரைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என ஆய்வு செய்த பிறகே பரிந்துரைக்கப்படவேண்டும் எனவும், இதில் தவறு ஏற்படின் சம்பந்தப்பட்ட வட்டாரக்கல்வி அலுவலர்/ உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியரே முழு பொறுப்பேற்க நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை 07.01.2022க்குள் கீழ்கண்டவாறு ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும், தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்க இயலாது எனவும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட அலுவலகம்/ பிரிவுகளில் நேரடியாக ஒப்படைக்க அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள்/ அரசு / நகராட்சி / உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

**மாறுதல் கோரும் ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள்ஒப்படைக்க வேண்டிய அலுவலகம் முதன்மைக்கல்வி அலுவலக பிரிவுகள்**

| வ. எண். | ஆசிரியர்கள் விவரம் | ஒப்படைக்க வேண்டிய அலுவக பிரிவுகள் |
|---|---|---|
| 1 | தொடக்க/ நடுநிலைப்பள்ளிகளில் பணிபுரியும் தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான மாறுதல் கோருதல் விண்ணப்பங்கள் | மாவட்டக்கல்வி அலுவலகம், வேலூர் |

| | | |
|---|---|---|
| 2 | உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் | மாவட்டக் கல்வி அலுவலகம், வேலூர் |
| 3 | முதுகலை ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை – 1 ஆகியோரின் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் | முதன்மைக் கல்வி அலுவலக "அ4" பிரிவு |
| 4 | பட்டதாரி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர் நிலை – 2 ஆகியோரின் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் | முதன்மைக் கல்வி அலுவலக "அ3" பிரிவு |
| 5 | கணினி பயிற்றுநர் நிலை 1 / தொழிற்கல்வி ஆசிரியர்கள் ஆகியோரின் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் | முதன்மைக் கல்வி அலுவலக "ஆ3" பிரிவு |
| 6 | உடற்கல்வி / சிறப்பாசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் ஆகியோரின் மாறுதல் கோரும் விண்ணப்பங்கள் | முதன்மைக் கல்வி அலுவலக "அ5" பிரிவு |

இணைப்பு :
பார்வை 1ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2ல் காணும் செயல்முறைகள்

ஒம்/–திரு க.முனுசாமி,
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1.வேலூர் மாவட்டக் கல்வி அலுவலருக்கு தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.
2. அனைத்து அரசு / நகராட்சி / உயர் / மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்